**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No. 346/2018</u>**

**<u>வழக்கு சாட்சி PW–1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அந்தோணி பாஸ்கர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆரோக்கிய சாமி | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | மரியதாய்புரம் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 28.04.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது வீ.கே.புதுார் காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 2018ம் வருடம் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 25.05.2018ம் தேதி பைக்பெட்ரோல் அலுவலராக நியமிக்கப்பட்டேன். அன்றுமாலை 4.00 மணியளவில் பாவூர்சத்திரம் செல்வவிநாயகர் புரத்தில் போக்குவரத்து ஒழுங்கு படுத்தும் வேலையில் இருந்தேன். அப்போது மேற்கிலிருந்து கிழக்காக வந்த அன்னலட்சுமி என்று எழுதப்பட்ட அசோக்லேலண்ட் லோடு வாகனத்தினை அதன் ஓட்டுனர் வேகமாகவும் ஓட்டிவந்தார். நான் பொது மக்கள் அதிகமாக நடமாடும் பகுதி என்பதால் மெதுவாக செல்லவேண்டிதான என்று கூறினேன். உடனடியாக அந்த ஓட்டுநர் ஆலங்குளம் நந்தவனம் கிழக்கு தெருவை சேர்ந்த மோசஸ் மகன் சுரேஷ் என்பவர் இறங்கி என்னை நோக்கி வந்தார். அவருக்கு பின்னால் வண்டி உரிமையாளர் சொரிமுத்து மகன் ஆறுமுகம் என்பவரும் வந்தார். இருவரும் என்னிடம் வந்து அவதுாரான வார்த்தைகளை பேசி என்னிடம்

எங்கள் வண்டியை எப்படி நீ மறிக்கலாம் என்று கூறி சுரேஷ் என்பவர் எனது தலையின் பின்பக்கத்தில் அடித்தார். வாகனத்தின் உரிமையாளரான ஆறுமுகம் அவதூறாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார். அருகில் உள்ள பொது மக்கள் மற்றும் செட்டியூரை சேர்ந்த அரிகிருஷ்ணன் மற்றும் பிரதீபன் இருவரையும் சத்தம் போடவும் இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைகிருந்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று சென்று விட்டார்கள். இதனால் எனக்கு அவமானமாகவும், பயமாகவும் இருந்தது. இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் அசாஆ.1 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சம்பவம் நடந்த காலத்தில் நான் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் 3 ஆண்டுகளாக வேலை பார்த்து வந்தேன். எங்கள் காவல் நிலையத்தில் இருந்து அரசு மருத்துவமனை சுமார் 300-400 கி.மீ தொலைவில் இருக்கும். 32 ஆண்டுகளாக காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறேன். பொதுவாக அடிதடி வழக்குகளில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது காயம் எதுவும் இருந்தால் மெடிக்கல் மெமோ பெற்று மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். எனக்கு வெளிகாயம் எதுவும் இல்லாததால் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நாங்கள் பாக்கெட்டைரி பராமரிப்போம் என்றால் சரிதான். பாக்கெட் டைரியை ஆய்வாளரிடம் விசாரணையில் கொடுத்தேன். அந்த பாக்கெட் டைரியில் சம்பவ நாள் நான் செய்த ரோந்து பணி விவரங்கள் துலங்கும் என்றால் சரிதான். வாகனத்தை நிறுத்தி பரிசோதனை செய்யவேண்டும் என்றால் உதவி ஆய்வாளர் பதவிக்கு மேல் உள்ள அதிகாரிகள் தான் செய்யவேண்டும் என்றால் வாகனத்திற்குள் சோதனை செய்யவேண்டும் என்றால் அவ்வாறான அதிகாரிகள் செய்யவேண்டும். வாகனத்தை மெதுவாக

செல்ல நாங்கள் அறிவுறுத்தலாம். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் சாலையானது தென்காசி - திருநெல்வேலி செல்லும் மெயின் ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் பகுதியை விட பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள நான்கு முக்கு சாலை போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். பேருந்து நிலையத்தை தாண்டி பாவூர்சத்திரம் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து ஆலங்குளம் செல்லவேண்டும் என்றால் பாவூர்சத்திரம் பேருந்து நிலையம், காவல் நிலையம் தாண்டி செல்ல வேண்டும் என்றால் சரிதான். ரோந்து பணி என்பது வேறு, போக்குவரத்தை சரிசெய்யும் பணி வேறு என்றால் காவல் நிலையத்தில் போக்குவரத்தை சரிசெய்ய தனியாக காவலர்கள் இல்லை நாங்கள்தான் அதனையும் பார்ப்போம். காவலர்களுக்கு பணி ஒதுக்கும்போது பொது நாட்குறிப்பில் அந்த பதிவு இருக்கும் என்றால் சரிதான். வாகனத்தை நாங்கள் நிறுத்தி சொன்னோமா என்றால் இல்லை. நிறுத்தாமா சொன்னோமா என்றால் வாகனத்தை நிறுத்தவில்லை. போய்கொண்டிருந்த வாகனத்தை கை அசைத்து மெதுவாக செல்ல சொன்னேன். நிறைய காய்கறிகள் லாரிகள் கேரளாவிற்கு சென்றுவிட்டு அந்த பாதை வழியாக திரும்ப வருவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் நாளில் 1 வது எதிரி வந்த வாகனத்தை நிறுத்தி அவரிடம் தினசரி மாமுல் கேட்டேன் என்றாலும் அவர் தர மறுத்ததால் தற்போது இந்த வழக்கு அவர் மீது என்னால் பொய்யாக புனையப்பட்டது என்றால் சரியல்ல. 1 வது எதிரி தன்னிடம் பணம் இல்லை என்று கூறியதாலும்,ஆனாலும் உங்களிடம் உரிமையாளரிடம் வாங்கி கொடு என்று சொல்லி, உரிமையாளருக்கு போன் செய்ய சொன்னதாகவும், போனில் பேசிய லாரி உரிமையாளர் பணத்தை தர மறுத்ததால் சம்பவயிடத்தில் இல்லாத அவரையும் இந்த வழக்கில்

பொய்யாக சேர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அந்த வாகன உரிமையாளரான 2ம் எதிரி ஆலங்குளத்தில் தொழில் செய்து வருவதால் அவர் ஆலங்குளம் காவல் துணை கண்காணிப்பாளரிடம் நான் கையூட்டு கேட்பது சம்மந்தமாக புகார் செய்ததால் காவல் கண்காணிப்பாளர் எங்கள் காவல் ஆய்வாளருக்கு தகவல் சொன்னதால் என்னை காப்பாற்றுவதற்கு காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்களின் கூட்டு ஏற்பாட்டின் பேரில் தற்போது இந்த பொய் வழக்கு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவயிடத்தை ஒட்டி பிரியா மருத்துவமனை இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தை ஒட்டி நிறைய கடைகள் இருந்தததது என்றால் சரிதான். அந்த கடைகளில் சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் கிடையாது. இந்த சம்பவத்தில் எதிரிகள் பயணம் செய்த லாரிதான் முக்கியமான வழக்கு பொருள் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எவ்வித சம்பவம் நடைபெற வில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்வதும், எனக்கு பயம் எற்பட்டதாக சொல்வதும் தகாத வார்த்தைகளால் பேசியதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. என்மீதான சட்டப்படியான நடவடிக்கையில் இருந்து தப்பிப்பதற்காக நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.04 11:58:24 +0530